2007 ஏப்ரல் 10]

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டைப் பொறுத்தளவிற்கு நமக்கு 76,000 கிலோ லிட்டர் மண்ணெண்ணெய் தேவைப்படுகிறது. ஆனால், இப்பொழுது மத்தியத் தொகுப்பிலிருந்து 59,852 கிலோ லிட்டர்தான் நமக்குக் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அதைத்தான் நாம் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். 39 இலட்சம் குடும்ப அட்டைகளுக்கு மண்ணெண்ணெய் வழங்கப்படவில்லை. அது குறித்துத் தொடர்ந்து மத்திய அரசுக்கு இதுவரை ஏழு முறை கடிதம் எழுதப்பட்டிருக்கிறது. இரண்டு முறை முதலமைச்சர் அவர்களே எழுதிய பிறகுதான், இரண்டு மாதத்திற்கு, மூன்று மாதத்திற்கு என்று தற்காலிகமாக மண்ணெண்ணெய் வழங்கப்பட்டது. அந்த மண்ணெண்ணெயை, புதிதாக இருக்கிற குடும்ப அட்டைதாரர்களுக்கு ஒரு முறை கொடுத்துவிட்டு, பின்னால் கொடுக்கவில்லையென்று சொன்னால், அதிலும் பிரச்சினை வரும். எனவே, ஏற்கெனவே குடும்ப அட்டை வழங்கியவர்களுக்கு விசேஷ காலங்களிலே அதாவது தீபாவளி வருகிறபொழுது, பொங்கல் வருகிறபொழுது மண்ணெண்ணெய் கூடுதலாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. எனவே, தொடர்ந்து அந்த முயற்சியை எடுத்துக்கொண்டிருக்கிறோம். வந்தவுடனேயே, மண்ணெண்ணெய் யார், யாருக்கெல்லாம் கொடுக்கப்பட வேண்டுமோ, அதைக் கொடுப்பதற்கு வேண்டிய முயற்சியைச் செய்வோம். தொடர்ந்து மத்திய அரசை நாம் அணுகிக்கொண்டுதான் இருக்கிறோம்; முறையாக அணுகிக்கொண்டிருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 38, மாண்புமிகு உறுப்பினர் திரு. தி.க. ராஜா, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

38—

வேலைவாய்ப்பு அலுவலகம்

***5967—திரு. தி.க. ராஜா:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூர் தொகுதியில் வேலைவாய்ப்பு அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

[2007 ஏப்ரல் 10

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருப்பத்தூர் தொகுதியில் வேலைவாய்ப்பு பதிவு அலுவலகம் ஏற்படுத்த செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி.க. ராஜா.

திரு. தி.க. ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டம் தமிழ்நாட்டிலேயே மிகப் பெரிய மாவட்டம். வேலூருக்கும், திருப்பத்தூருக்கும் 100 கிலோ மீட்டர் தூரம் இருக்கிறது. கடந்த காலங்களிலே ஆலங்காயத்திலே வேலைவாய்ப்பு பதிவு அலுவலகம் இருந்தது, அதையும் எடுத்துவிட்டார்கள். இப்பொழுது நாங்களெல்லாம் வேலைவாய்ப்பு அலுவலகத்திலே பதிவு செய்ய வேண்டுமென்றால், 100 கிலோ மீட்டர், 150 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள வேலூருக்குச் செல்ல வேண்டும். அப்படி இல்லையென்று சொன்னால், திருப்பத்தூர் நகராட்சியிலே, மாதத்திலே கடைசி செவ்வாய்க்கிழமை ஒரு நாள் மட்டும் பதிவு செய்கிறார்கள். அங்கே 100 பேர்களுக்கு மட்டும்தான் பதிவு செய்கிறார்கள். வேலூரிலே, திருப்பத்தூர் கல்வி மாவட்டம், வேலூர் கல்வி மாவட்டம் என்று செயல்படுகின்றன. அதிலே, திருப்பத்தூர் கல்வி மாவட்டத்திலே மட்டும் ஆண்டொன்றுக்கு 43,000 மாணவர்கள் 10 ஆம் வகுப்பு, 12 ஆம் வகுப்பு, I.T.I., Polytechnic போன்ற படிப்புகளை முடித்துவிட்டுப் பதிவு செய்ய முடியாமல் கஷ்டப்படுகிறார்கள். அங்கே இருப்பவர்கள் எல்லாம் ஏழை விவசாயக் கூலிகள். அவர்களெல்லாம் வேலூருக்குச் சென்று பதிவு செய்ய முடியாத அவல நிலை இருக்கிறது. எனவே, அரசு அதைக் கருத்தில்கொண்டு, இப்பொழுது மாதக் கடைசியிலே செவ்வாய்க்கிழமை பதிவு செய்கின்ற அந்த முறையை மாற்றி, தினசரி பதிவு செய்கின்ற நிரந்தர அலுவலகம் அமைத்துத் தர அமைச்சர் முன்வருவாரா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு வேலைவாய்ப்பு அலுவலகம் தற்பொழுது செயல்பட்டு வருகிறது. வேலூர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம், வேலூர் மாவட்டத்தைச் சேர்ந்த மனுதாரர்களைப் பதிவு செய்தல், பணியமர்த்துதல், தொழில் முறை வழிகாட்டுதல் மற்றும் சுய வேலைவாய்ப்பிற்கு ஊக்குவித்தல் ஆகிய

2007 ஏப்ரல் 10]

பணிகளை ஆற்றி வருகிறது. எனவே, வேலூர் மாவட்டத்தில் ஏற்கெனவே அலுவலகம் ஒன்று செயல்பட்டு வரும் நிலையில், புதியதாகத் திருப்பத்தூர் தொகுதியில் வேலைவாய்ப்பு அலுவலகம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி.க. ராஜா.

திரு. தி.க. ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பகுதியிலே இந்தியாவிலேயே மிகச் சிறந்த சந்தன மரங்கள் விளையக்கூடிய ஜவ்வாது மலை, ஏலகிரி மலை இருக்கின்றன. அங்கே சுமார் ஒரு இலட்சம் மலைவாழ் மக்கள் வசிக்கிறார்கள். அது மட்டுமல்லாமல், திருப்பத்தூர் கல்வி மாவட்டத்திலே 81 உயர்நிலைப் பள்ளிகளிலே ஆண்டொன்றுக்கு 22,480 பேர் படித்துவிட்டு வெளியே வருகிறார்கள். அதேபோல, திருப்பத்தூர் கல்வி மாவட்டத்தில் உள்ள 88 மேல்நிலைப் பள்ளிகளிலே, 12 ஆயிரம் பேரும், 53 மெட்ரிக் பள்ளிகளிலே 2,800 பேரும், அதேபோல கலைக் கல்லூரிகளிலே 3 ஆயிரம் பேரும், பாலிடெக்னிக் கல்லூரிகளிலே 900 பேரும், பிரைமரி நர்சரி பள்ளிகளிலே 300 பேரும், தையல், டைப்பிங் போன்ற பள்ளிகளிலே 500 பேரும், Teacher Training-லே 1,500 பேரும், இப்படியாக 25 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் தொடர்ந்து 100 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள வேலூருக்குச் செல்ல முடியாத அவல நிலை இருக்கிறது. மாண்புமிகு கலைஞர் அவர்களுடைய நல்லாட்சியிலே, பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான கட்டடங்கள் எல்லாம் நிறையக் காலியாக இருக்கின்றன. அரசாங்கத்திற்கு அந்தச் செலவுகூட கிடையாது. எனவே, நிரந்தரமாக அங்கே ஒரு அலுவலகத்தைத் தொடங்கி, ஏழை மக்கள் கல்வி கற்றபின், வேலைவாய்ப்பிற்குப் பதிவு செய்வதற்கு உதவிட நீங்கள் முன்வருவீர்களா என்பதைப் பேரவைத் தலைவர் அவர்கள்மூலமாக அறிந்துகொள்ள விரும்புகின்றேன்.

முற்பகல் 10-05

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை அரசு நிச்சயமாகப் பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

[2007 ஏப்ரல் 10

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துள்ள படித்த இளைஞர்களுக்கு, தமிழகத்தினுடைய மாண்புமிகு முதல்வர், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய அரசு உதவித் தொகை தருகின்ற அந்தச் சூழல் வந்த பிறகு, ஆயிரக்கணக்கான மாணவர்கள் தங்களுடைய கல்வியை முடித்துவிட்டு, ஒன்று, அந்த அலுவலகங்களில் பதிவு செய்வதற்கு நீண்ட வரிசையில் காத்துக்கொண்டிருக்கிறார்கள். இரண்டாவது, அப்படிக் காத்திருக்கின்றபோது, அவர்களுக்கு வாந்தி, மயக்கம் ஏற்பட்டு, வெயிலில் சுருண்டு விழுகிறார்கள். ஒரு மாவட்டத்திற்கு ஒரு வேலைவாய்ப்பு அலுவலகம் என்றிருப்பதை மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர், பல்வேறு பணிகளுக்கு ஆள் எடுக்கின்ற நம்முடைய அரசு, எளிதாக இந்தத் திட்டங்கள் மக்களுக்குச் சென்று சேர்கின்ற வகையில் ஒரு கொள்கை முடிவாக, தமிழகம் முழுவதும், மாவட்டத்திற்கு இரண்டு மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களைத் தொடங்குவதற்கு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த கால ஆட்சியில் வேலைவாய்ப்புத் துறை வேலையில்லாத துறையாக இருந்தது. இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றதற்குப் பிறகு, வேலைவாய்ப்பு அலுவலகங்களில் இன்றைக்கு அதிகப் பணிகளைச் செய்யக்கூடிய ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதைக் கருத்தில்கொண்டு, தற்போது சில மாவட்டங்களிலே இருக்கிற வேலைவாய்ப்பு அலுவலகங்களில் போதிய இட வசதி இல்லாத காரணத்தினால், சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் சொல்லி வசதியான புதிய இடங்களுக்கு மாற்ற வேண்டும் என்று உத்தரவிட்டு, வேறு விசாலமான கட்டடங்களுக்கு வேலைவாய்ப்பு அலுவலகங்களை மாற்றுவதற்கான முயற்சியை இந்த அரசு மேற்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 39, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ.ம. வேலுசாமி, மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்.